இந்து தமிழ் திசை

4 உள்வலம்

செவ்வாய், ஜனவரி 6, 2026 www.hindutamil.in

மேட்டூர் அணை நிலவரம்: மேட்டூர் அணையில் நேற்று மாலை நிலவரப்படி, நீர்மட்டம் 100.80 அடியாகவும், அணைக்கு நீர் வரத்து 301 கன அடியாகவும் இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 11,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது.

கல்லணையிலிருந்து நீர் திறப்பு: கல்லணையில் இருந்து நேற்று காவிரியில் 5,004 கன அடி நீர் திறக்கப்பட்டது. மேலும், வெண்ணாற்றில் 2,703 கன அடியும், கல்லணைக் கால்வாயில் 1,011 கன அடியும், கொள்ளிடத்தில் உபரி நீர் 957 கன அடியும் திறக்கப்பட்டது.

முதல்வரின் திட்டங்களால் அனைவரும் பயன்பெறுவதை

பழனிசாமியால் பொறுக்க முடியவில்லை

அமைச்சர் சிவசங்கர் விமர்சனம்

சென்னை

மகளிர், அரசு ஊழியர், மாணாக்கர் என அனைவரும் முதல்வரின் திட்டங்களால் பயன்பெறுவதைப் பார்த்து பழனிசாமியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

பழனிசாமி ஆட்சியில் 2019-ம் ஆண்டிலேயே லேப்டாப் வழங்கும் திட்டத்தை நிறுத்திவிட்டு தொடர்ந்து வழங்கி வந்ததாக பொய் கூறுகிறார். அதிமுக ஆட்சியில் ரூ.68 கோடியில் வாங்கிய 55 ஆயிரம் லேப்டாப்கள் வீணடிக்கப்பட்டதை இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கை அறிக்கை (சிஏஜி) வெளிச்சம் போட்டுக் காட்டியது.

பழனிசாமி ஆட்சியில் நடந்த லேப்டாப் முறைகேட்டை அம்பலப்படுத்திய சிஏஜி அறிக்கை 2023 ஏப்ரலில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 2017-18-ம் ஆண்டு போட்டித் தேர்வுக்குத் தயாரான 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்க எல்காட் நிறுவனம் மூலம் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட லேப்டாப்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

அதில் குறைந்த அளவிலான லேப்டாப்களை மட்டும் விநியோகித்துவிட்டு, 55 ஆயிரம் லேப்டாப்களை தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்காததால், அந்த லேப்டாப்களின் பேட்டரி வாரண்டி காலாவதி ஆகிவிட்டது. இதனால் ரூ.68.71 கோடி நஷ்டம் ஏற்பட்டதாக சிஏஜி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிஏஜி அறிக்கையின்படி, பழனிசாமி ஆட்சியில் 2017-18 முதல் 2020--21 வரை 11 மற்றும் 12-ம் வகுப்பில் 18.60 லட்சம் தகுதியான மாணவர்கள் இருந்தார்கள். ஆனால் 20 சதவீத மாணவர்களுக்கு வழங்காமல் புறக்கணித்தார்கள். 2017-18-ம் ஆண்டில் 12-ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற 2.32 லட்சம் மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை லேப்டாப்களை பெறவில்லை.

தற்போது 20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு லேப்டாப் வழங்கும் 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தை முதல்வர் தொடங்கி வைக்கிறார். தமிழக மாணவர்கள் உலகத்தோடு போட்டியிடும் வகையில் ஒவ்வொரு திட்டமாக வகுத்து வருகிறது திமுக அரசு.

மகளிர், அரசு ஊழியர், மாணாக்கர் என ஒவ்வொரு பிரிவினரும் முதல்வரின் திட்டங்களால் பயன்பெறுவதைப் பார்த்து பழனிசாமியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மதுப்பாட்டில் திரும்பப்பெறும் திட்டம் சென்னையில் இன்று முதல் அமல்

சென்னை

மதுபான பாட்டில்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுக்க, காலி மதுபான பாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்தை நடைமுறைப்படுத்த சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி நீலகிரியில் முதலில் அமல்படுத்தப்பட்ட இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த நீதிமன்றம் அறிவுறுத்தியது. தற்போது 21 மாவட்டங்களில் இத்திட்டம் அமலில் உள்ளது.

இந்நிலையில், சென்னையில் இன்று (6-ம் தேதி) முதல் இந்த திட்டம் அமலாக உள்ளது. இந்த திட்டத்தின்படி, மதுபாட்டில்களை வாங்கும் போது மதுபாட்டில் ஒன்றுக்கு ரூ.10 கூடுதலாகப் பெற்று மது அருந்திவிட்டு, காலி மதுபாட்டில்களைத் திரும்ப அதே மதுபானக் கடையில் ஒப்படைக்கும் போது, ஏற்கனவே செலுத்திய ரூ.10-ஐ திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

இதனால் கூடுதல் பணிச்சுமை ஏற்படும், காலி பாட்டிகளை சேமிக்க கடைகளில் போதிய இடம் இல்லை. இந்த திட்டத்துக்காக கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று டாஸ்மாக் பணியாளர்கள் கூறுகின்றனர்.

'கிக்' தொழிலாளர்களுக்கு இ-ஸ்கூட்டர் திட்டம்

முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை

தமிழ்நாடு இணையம் சார்ந்த 'கிக்' (Gig) தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் இ-ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு இணையம் சார்ந்த 'கிக்' தொழிலாளர்கள் நல வாரியம் 2023-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இவ்வாரியத்தில் 23,687 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இந்தத் தொழிலாளர்கள் ஓய்வு எடுக்கவும், செல்போனுக்கு சார்ஜ் செய்வதற்கும், கழிப்பறை வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட ஓய்வுக்கூடங்கள் சென்னை, கோயம்புத்தூர் நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு ரூ.5 லட்சம் வரையிலான குழு காப்பீட்டுத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், 'கிக்' தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு புதிய 'இ-ஸ்கூட்டர்' வாங்கும் செலவினத்தில் ரூ.20 ஆயிரம் மானியமாக வழங்கும் புதிய திட்டம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு இணையம் சார்ந்த 'கிக்' தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற 100 தொழிலாளர்களுக்கு புதிய இ-ஸ்கூட்டர் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், அமைச்சர் சி.வி.கணேசன், தலைமைச்செயலர் நா.முருகானந்தம், தொழிலாளர் நலத்துறை செயலர் கோ.வீரராகவராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், உடலுழைப்பு தொழிலாளர் நலவாரிய செயலாளர் திவ்யநாதன், தொழிலாளர் கூடுதல் ஆணையர் எ.யாஸ்மின்பேகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஓடும் பேருந்தில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி பெண் பயணிகளிடம்

செல்போன் திருடிவந்த 4 பேர் கும்பல் கைது; 14 போன்கள் மீட்பு

சென்னை

ஓடும் பேருந்தில் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி பெண் பயணிகளை குறிவைத்து செல்போன் திருட்டில் ஈடுபட்ட 4 பேர் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது.

நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்தவர் திலகம் (42). ஓட்டேரியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் செல்ல கடந்த 3-ம் தேதி இரவு, புரசைவாக்கம், மோட்சம் திரையரங்கம் பேருந்து நிறுத்தத்திலிருந்து மாநகர அரசுப் பேருந்தில் (தடம் எண்.29ஏ) ஏறி பயணித்துக் கொண்டிருந்தார். சிறிது தூரத்தில் ஓட்டேரி பாலம் அருகே அவரது பையில் வைத்திருந்த, செல்போனை யாரோ திருடிவிட்டது தெரியவந்தது.

அவர் கூச்சலிட்டு செல்போன் திருடுபோனதை தெரிவித்தார். இதையடுத்து பேருந்து சாலையோரம் நிறுத்தப்பட்டது. பேருந்தில் இருந்த மற்ற பயணிகளும் அவர்களது செல்போன்களை சரிபார்த்தனர். அப்போது அதே பேருந்தில் பயணம் செய்த மேலும் 2 பெண்களின் செல்போன்களும் திருடுபோனது தெரிந்தது.

இதையடுத்து, பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் இருவரும் சேர்ந்து பயணிகள் உதவியுடன் பேருந்திலிருந்து செல்போன் திருடர்கள் வெளியேற முடியாதவாறு தடுப்பு அமைத்து பேருந்தில் இருந்த பயணிகள் ஒவ்வொருவரிடமும் சோதனை செய்தனர். தகவல் அறிந்து ஓட்டேரி போலீஸாரும் சம்பவ இடம் விரைந்து சோதித்தனர். இதில் செல்போன் திருட்டில் ஈடுபட்ட பெரம்பூர் முனியப்பன் தெருவைச் சேர்ந்த பழனி (36), அவரது மனைவி ஜமுனா (24), மதுரவாயல் சீமாத்தம்மன் நகரைச் சேர்ந்த குப்பன் (42), பாலு என்ற சொரி பாலு (39) ஆகியோர் பிடிபட்டனர்.

விசாரணையில் இவர்கள் 4 பேரும் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி மேலும் சிலருடன் கூட்டு சேர்ந்து பயணிகளோடு பயணிகளாக அரசுப் பேருந்தில் ஏறி சக பயணிகளின் செல்போன்களை திருடிச் செல்வதும், அந்த செல்போன்களை ஓரிடத்தில் மறைத்து வைத்துள்ளதும் தெரியவந்தது. அதன்பேரில் அவர்கள் மறைத்து வைத்திருந்த 14 செல்போன்கள் மீட்கப்பட்டன.

பழனி மீது 2 குற்ற வழக்குகளும், பாலு மீது 2 கொலை முயற்சி, திருட்டு, வழிப்பறி என 12 குற்ற வழக்குகளும், குப்பன் மீது திருட்டு, வழிப்பறி என 14 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. தலைமறைவாக உள்ள இவர்களது கூட்டாளிகளை போலீஸார் தொடர்ந்த தேடி வருகின்றனர்.

உழவர்கரை பகுதியில் பொங்கலை முன்னிட்டு நாளை முதல்

பயனற்ற பொருட்களை சாலைகளில் போட வேண்டாம்

வாட்ஸ்அப்பில் தகவல் தெரிவித்தால் அகற்றப்படும்

புதுச்சேரி

உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ் ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பொங்கலை முன்னிட்டு வீடுகளில் உள்ள பயனற்ற பழைய மெத்தைகள், சோபாக்கள், படுக்கைகள் மற்றும் பழுதடைந்த மின்சாதன பொருட்களான பிரிட்ஜ், வாஷிங் மெஷின், டிவி போன்றவற்றை சாலைகளில், குப்பை தொட்டிகளில் போடுகின்றனர். இவைகளை அகற்றுவதால் தினசரி குப்பை அகற்றும் பணி பாதிக்கப்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நாளை (ஜன.7) முதல் 13-ம் தேதி வரை மேற்கூறிய மொத்தக்கழிவுகளை நகராட்சி வாகனம் மூலம் ஒவ்வொரு வார்டு பகுதியாக தனியே சேகரிக்கப்பட உள்ளது. இதுதொடர்பான விவரங்களை 'https://oulmun.in/whatsnew.php' என்ற இணையத்தின் மூலம் நகராட்சிக்கு தெரிவிக்கலாம். வீடுகளில் மேற்கூறிய பயனற்ற பொருட்கள் இருந்தால் அவற்றை சாலைகள், குப்பை தொட்டி அருகில் போடாமல் நகராட்சியின் கட்டுப்பாட்டு அறையை 0413- 2200382 மற்றும் வாட்ஸ் அப் 7598171674 எண்ணிலும், க்ரீன் வாரியர் நிறுவனத்தின் 9118383911 புகார் எண்ணிலும் வீட்டு முகவரியுடன் தகவல் தெரிவித்தால் தங்களின் வீடுகளுக்கு வந்து பயன்ற பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிக்கு மடிக்கணினி வழங்கிய பொன்முடி எம்எல்ஏ. உடன் ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், எம்எல்ஏக்கள் செஞ்சி மஸ்தான், லட்சுமணன், அன்னியூர் சிவா.

விழுப்புரம் மாவட்டத்தில்

6,158 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கல்

விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு சட்டக் கல்லூரி, அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் 6,158 மாணவ மாணவிகளுக்கு 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தின் கீழ் மடிக்கணினி வழங்கும் பணி நேற்று தொடங்கியது.

விழுப்புரம் சட்டக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், பொன்முடி எம்எல்ஏ ஆகியோர் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ரவிக்குமார் எம்.பி, எம்எல்ஏக்கள் செஞ்சி மஸ்தான், லட்சுமணன், அன்னியூர் சிவா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கந்துவட்டி தகராறில் இளைஞரை கொன்ற 4 பேருக்கு ஆயுள் தண்டனை

கும்பகோணம்

கந்துவட்டி தகராறில் இளைஞரை கொன்ற 4 பேருக்கு ஆயுள் தண்டனையும், கொலை செய்ய தூண்டியவருக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து கும்பகோணம் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பாணாதுறை பத்துக்கட்டுத்தெருவை சேர்ந்தவர் சிவசுப்ரமணியன்(54). இவர் அதே பகுதியில் மளிகை கடை நடத்தி வருகிறார். இவர், தனது வியாபாரத்துக்காக அதே பகுதியைச் சேர்ந்த செந்தில்குமார்(57) என்பவரிடம், ரூ.3 லட்சம் கடன் வாங்கி இருந்தார். அந்த கடனுக்கு வட்டியாக மட்டும் ரூ.3 லட்சம் வரை கொடுத்துள்ளார். அதன்பின் சிவசுப்பிரமணியனால், கடன் தொகையை திருப்பிக் கொடுக்க முடியவில்லை.

இந்நிலையில், 2019-ம் ஆண்டு மே1-ம் தேதி, சிவசுப்பிரமணியனின் மகன் அருண்(22) கடையில் இருந்தபோது, பணத்தைக் கேட்டு செந்தில்குமார் தகராறு செய்துள்ளார். பின்னர், இந்தப் பிரச்சினை தொடர்பாக பாலகுரு(53) என்பவரிடம் செந்தில்குமார் கூறியுள்ளார்.

இதில், பாலகுரு துண்டுதலின் பேரில், செந்தில்குமார், தனது நண்பர்களான வெங்கடேசன்(42), சந்திரசேகரன்(50), கதிரவன்(29), ஜீவா கருணா(எ) முகமது சபீர் ஆகியோருடன், சிவசுப்பிரமணியன் கடைக்கு சென்று, அங்கிருந்த அருணிடம் தகராறு செய்து, அரிவாளால் வெட்டிக் கொலை செய்தார்.

இதுகுறித்து கும்பகோணம் கிழக்கு போலீஸார் கந்துவட்டி தடை சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, பாலகுரு, செந்தில்குமார், வெங்கடேசன், சந்திரசேகரன், கதிரவன் ஆகியோரை கைது செய்தனர். இதில் ஜீவா கருணா தலைமறைவாகிவிட்டார்.

இவ்வழக்கு, கும்பகோணம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றம்சாட்டப்பட்ட செந்தில்குமார், வெங்கடேசன், சந்திரசேகரன், கதிரவன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனையும், கொலைக்கு தூண்டுதலாக இருந்த பாலகுருவுக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து நேற்று தீர்ப்பளித்தார்.

மதுரை மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

மதுரை மாநகராட்சியால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது

பணியின் பெயர்	ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கும் நாள்	ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள்
E1/Est.No.001875/2025 (3rd Call) புதிதாக இணைக்கப்பட்ட வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது- அதற்கு திட்ட மேலாண்மை மற்றும் ஆலோசகர் (PMC) நியமனம் செய்யும் பணி (Tender Put Value - 471.89 Lakhs) (Including GST)	From 07 - 01 - 2026 to 22 - 01 - 2026 3.00 p.m.	22 - 01 - 2026 4.00 p.m.

Pre-Bid Meeting Date And Time: 13.01.2026, 11.00 AM

இதர விபரங்களை http://www.tntenders.gov.inஎன்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். Contact No : 0452-2540333

ஆணையாளர்
மதுரை மாநகராட்சி

செ.ம.தொ.இ / 29 / ஒப்பந்தப்புள்ளி / 2026

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.23, தரைத்தளம் & முதல் தளம், வார்டு எண்.3, ஹாஸ்பிட்டல் ரோடு, காந்தி நகர், மயிலாடுதுறை, தமிழ்நாடு-609001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1642210090000006 / 1.M/s.பாலாஜி டென்டல் கிளினிக் 2.Mr.K.பாலாஜி, 3.Mr.M.கலியபெருமாள்	(I) 07.09.2022 & 01.09.2022 அன்றுள்ளபடி ₹ 30,16,786/- (ரூபாய் முப்பது லட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.02.2023 & நேரடி சுவாதீனம் - 23.08.2025	06.12.2025 அன்றுள்ளபடி ₹ 53,11,442.03 (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து பதினொன்றாயிரத்து நானூற்று நாற்பத்திரண்டு மற்றும் பைசா மூன்று மட்டும்)	₹ 37,09,400/- (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்)	₹ 3,70,940/- (ரூபாய் மூன்று லட்சத்து எழுபதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்)

சொத்து விவரம்: புதுச்சேரி பதிவு மாவட்டம் மற்றும் காரைக்கால் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பட்டா எண்.486(N), பழைய சர்வே எண்.1041 பகுதி, மறு சர்வே எண்.104/69 (புதிய சப் டிவிஷன் மறு சர்வே எண்.104/69/A/1/A/4, 13, கொட்டுச்சேரி கிராமம், மனை எண்.10, புது தெரு, புது நகர், மங்களா நகர், கொட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து என்னும் முகவரியில் தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 20.80 மீட்டர், மேற்கு பக்கம் 17.40 மீட்டர், கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 11.00 மீட்டர், தெற்கு பக்கம் 11.80 மீட்டர், ஆக மொத்தம் 218 சதுர மீட்டர் அல்லது 2346 சதுர அடி நிலம் மற்றும் RCC கூரைப்போட்ட கட்டிடம். எல்லைகள்: 6.10 மீட்டர் பொது வழிப்பாதைக்கு தெற்கு, மனை எண்.11-க்கு மேற்கு, R.S.எண்.104/70-ல் உள்ள சொத்துக்கு வடக்கு, மனை எண்.9-க்கு கிழக்கு. **மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது Mr.K.பாலாஜி, S/o.M.கலியபெருமாள்-க்கு சொந்தமானது (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).**

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 11.02.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
10.02.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	09.02.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
தேதி: 06.01.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
சென்னை - 600032

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: TENDER No. T1 / TNPCB /F.35267 / PWM / SUP Consultant / 2025, Dt. 05.01.2026

"தமிழ்நாட்டில் ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக் தடையை செயல்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்க மற்றும் கண்காணிக்க, சுழற்சி பொருளாதாரத்தை மேம்படுத்த மற்றும் அனைத்து கழிவுகளுக்கும் (நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு) EPRஐ செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்கும்" ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க இணைய வழியிலான ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறைப்படி) வரவேற்கப்படுகின்றன

ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **https://tntenders.gov.in** மற்றும் **www.tnpcb.gov.in** இணையதளங்களில்:06.01.2026 முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் கடைசி நாள்:19.01.2026

தலைவர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை- 32

செ.ம.தொ.இ / 25 / ஒப்பந்தப்புள்ளி / 2026

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
(அரசு சார்பு நிறுவனம்)
வடக்கு வட்டம்
எண்.1&7, ஆய்வாளர் குடியிருப்பு, மாநகர் காவல் அலுவலக பின்புறம், லைன்மேடு, சேலம்-636 006.
மின் அஞ்சல் : senctnphcl@gmail.com & spndengrsc.tnphcl@tn.gov.in தொலைபேசி எண்: 0427 – 2903010

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிக்கை எண் : 33/2025–2026 நாள் : 05.01.2026

வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு (இலட்சத்தில்)
1) சேலம் மாநகரில் புதிய பூம்புகார் விற்பனை நிலையக் கட்டடம் கட்டுதல் (க.பொ/வவ/வபி/4670/2025)	ரூ. 103.95 + GST @ 18%

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in அணுகவும் 2) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நாள் மற்றும் நேரம் : **13.01.2026 நண்பகல் 12.00 மணி முதல் 27.01.2026 மாலை 06.00 மணி வரை** 3) ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **29.01.2026 காலை 11.15 மணிக்கு** 4) விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை **www.tnphc.com & www.tnpolice.gov.in** ஆகிய இணையதளங்களில் காணலாம்.

கண்காணிப்புப் பொறியாளர்,
வடக்கு வட்டம்

செ.ம.தொ.இ/22/ஒப்பந்தப்புள்ளி/2026

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

பெயர் மாற்றம்
புதுச்சேரி - 605 005, நெல்லித்தோப்பு, அண்ணா நகர், 11-வது குறுக்கு தெரு, நெ.58, விலாசத்தில் வசிக்கும் CHAARURAKSHANAA JAIGANESH ஆகிய நான் எனது பெயரை CHAARURAKSHANAA JAIGANESH JEYAMATHA என்று பெயர் மாற்றம் செய்து கொண்டேன்.
--- CHAARURAKSHANAA JAIGANESH

பெயர் மாற்றம்
தஞ்சாவூர் - 606302, கடலூர் மாவட்டம், புவனகிரி தாலுகா, பரங்கிப்பேட்டை, ... 4/6, என்ற முகவரியில் வசிக்கும் JAMILA BEGAM D/O Jager hussain (D.O.B: 24.03.1997), என்கிற எனது பெயரை J. JAMILA BEGUM D/O JAGER HUSSAIN என்று பெயர் மாற்றம் செய்து கொள்கிறேன் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.
-JAMILA BEGAM D/O JAGER HUSSAIN

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

CH-PY